# மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

# கும்முடிப்பூண்டி

| வழக்கு எண்: C.C. 66 / 2023 | காவல் நிலையம்– பாதிரிவேடு | |
|---|---|---|
| பெயர் : சகுந்தலா | அ.சா.3 | நாள் : 10.09.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.3 என்பவரின் வாக்குமூலம் 1969ஆம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சகுந்தலா | தாலுக்கா | : | |
| கணவர் பெயர் | : | கிருஷ்ணன் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | கயடை | வயது | : | 50 |

( எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் கயடை கிராமத்தில் பூர்விகமாக வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

**(சாட்சியை <u>பிறழ் சாட்சியாக</u> கருதவேண்டும் என்று அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்களை பரீசிலித்து அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய மகன் திருமலையின் மனைவி சங்கீதா என்பவர் கள்ள காதலுடன் ஓடிவிட்டார் என்றும்,அதன் காரணமாக அவரை பல இடங்களில் நாங்கள் தேடினோம் என்றும், பின்னர் என் மருமகள் சத்தியவேட்டில் இருப்பதாக தகவல் தெரிந்து என்னுடைய மகனான திருமலையும் மற்றும் சுகுந்தன் என்பவரும் அவருடைய ஊருக்கு சென்றோம் என்றும், அப்போது சங்கீதா பொம்மாச்சி குளம் சென்றுவிட்டார் என்றும், பின்னர் இது சம்பந்தமாக நானும் கந்தன் மனைவியான ராஜேஸ்வரி என்பவரும் பொம்மாச்சி குளம் சென்றோம் என்றும், அங்கிருந்த ஆஜர் எதிரியானவர் எங்களை பார்த்து தகாத வார்த்தையால் பேசினார் என்றும், அப்போது ஆஜர் எதிரியானவர் என்னையும எனது மகனையும் சுகுந்தனையும் அடித்ததால் எனது மகனுக்கு அவருடைய தலை மற்றும் கால் பகுதிகளில் காயம் ஏற்பட்டது என்றும், அந்த தாக்குதலில் எனது மகனின் 2 பற்களும் கழண்டு விட்டது என்றும்,மேற்படி சம்பவம்

தொடர்பாக எனது மகன் பாதிரிவேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், எனது மகனுக்கு ஏற்பட்ட காயத்தின் காரணமாக பொன்னேரி அரசு மருத்துவமனை மற்றும் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்து கொண்டார் என்றும், எனது மகன் சிகிச்சை எடுத்து கொண்டது சம்பந்தமாக பாதிரிவேடு காவல் நிலைய போலிசார் என்னை விசாரணை செய்தார் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிக்கு சாதகமாக இவ்வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/— சகுந்தலா

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

R. Senthil Kumar, M.A., B.L.,
Digitally signed by R. Senthil Kumar, M.A., B.L.,
Date: 2025.09.10 12:30:36 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி